OS 203/2017

பி.வா.சா. 1 ரமேஷ்குமார் த/பெ பச்சியப்ப முதலியார்

நாள் 04.02.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. பணம் வாங்கிக்கொண்டு தான் 10.01.2007ல் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தேன் என்றால் ஆமாம் காசோலை கொடுத்தார் அதன் பிறகு எழுதி கொடுத்தேன். 12.08.2013ம் தேதி வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். அதற்கு நான் 19.08.2013ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். பதில் அறிவிப்பு அனுப்புவதற்கு என் வழக்கறிஞருக்கு நான் தான் விவரம் கூறினேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் கிரைய ஒப்பந்தம் போர்ஜெரியாக எழுதப்பட்டது என்ற விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. எனது பதில் அறிவிப்பில் கிரைய ஒப்பந்தம் போர்ஜெரி என்று சொல்லப்பட்டுள்ளதை தற்போது பணம் வாங்கிக்கொண்டு எழுதி கொடுத்ததாக சாட்சியம் அளித்திருக்கிறேன் எது உண்மை என்றால் இரண்டுமே உண்மை தான்.

2. கிரைய ஒப்பந்தம் கடனுக்காக எழுதப்பட்டதாக நான் கூறும் நிலையில் அதற்கு வட்டி செலுத்தி இருக்கிறேனா என்றால் ரூ.1,08,000/- வட்டி செலுத்தி இருக்கிறேன். ரூ.1,08,000/-ஐ ஒரே தேதியில் செலுத்தினேனா அல்லது வேறு வேறு தேதியில் மாதாமாதம் செலுத்தினேனா என்றால் ஒரே தேதியில் செலுத்தினேன். எந்த தேதியில் எந்த மாதத்தில் எந்த வருடத்தில் ரூ.1,08,000/-ஐ செலுத்தினேன் என்றால் 12.08.2009ல் செலுத்தினேன். நான் செலுத்தியதாக செல்லும் மேற்படி வட்டி தொகை விவரம் குறித்து பி.வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தத்தில் விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை தனியாக ரசீது எழுதி கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.3ஐ ரத்து செய்து விட்டு அடமானப்பத்திரம் எழுதுவதாக சொன்னார். பேசியபடி அடமானப்பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அவர் சொன்னது போல் ஒப்பந்தத்தை ரத்து செய்யவில்லை. அடமானப்பத்திரம் எழுதி கொடுத்தால் கிரைய ஒப்பந்தம் ரத்து செய்து கொடுப்பதாக கூறினார் என்றும் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்யாததால் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை எழுத்து மூலமாக கொடுத்தேனா என்றால் எழுத்து மூலமாக கொடுக்க வில்லை வாய்மொழியாக சொன்னேன்.

3. வாய்மொழியாக ஆட்சேபனை செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்து கொடுக்காமல் வாதி என்னை ஏமாற்றிவிட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை நானும் சாட்சியும் நேரிடையாக சென்று வாதியிடம் கேட்டோம். வாதி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுப்பதாக கூறி ஏமாற்றிவிட்டார் என்று அடமானக்கடன் பத்திரத்தை ரத்து செய்வதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞரிடம் சொல்லி அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன். நான் அனுப்பியதாக சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் 2013ல் அறிவிப்பு அனுப்பினேன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருக்கிறேன். அடமானப்பத்திரம் 2009ல் ஏற்பட்டது 4 வருடங்கள் கழித்து அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் ஆமாம் அது 2வது அறிவிப்பு ஆகும். ஏற்கனவே ஒரு முதல் அறிவிப்பை 2009ல் அனுப்பியிருக்கிறேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தகவல் தெரியவில்லை.

4. கிரைய ஒப்பந்தப்படி மீதி தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்கும் படி வாதி என்னிடம் கேட்டார் என்றால் இல்லை என்னிடம் கேட்கவில்லை. மீதி கிரைய தொகையை கொடுத்து கிரையம் செய்து கொள்ள வாதி என்னிடம் கேட்டார் என்றாலும் நான் தான் காலம் கடத்தி வந்தேன் என்றாலும் இல்லை. 11.12.2009ல் மேலும் ரூ.3.5 லட்சம் பெற்றுக்கொண்டு தாவா அடமான கடன் பத்திரத்தை வாதி பெயருக்கு நான் எழுதி கொடுத்தேன் என்றால் இல்லை. அடமான கடன் ஆவணம் ஏற்பட்ட தேதியிலேயே வாதி பி.வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த படி கிரையம் செய்து கொள்ள தயாராக இருந்தார் என்றாலும் நான் தயாரா இல்லை என்றாலும் பொறுப்பிற்காக தாவா அடமான கடன் பத்திரத்தை எழுதி கொடுத்தேன் என்றாலும் இல்லை. 27.08.2017ம் தேதி அன்று பி.வா.சா.ஆ.5 புகாரை காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 புகாரில் வாதி பெயர் இருக்கிறதா என்றால் சாட்சி அதை பார்வையிட்டு இல்லை என்று கூறினார். வாதிக்கு எதிராக புகார் கொடுத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் 10 வது பத்தியில் எனது மனைவி பெயரில் இருந்த டாடா வேனை வட்டிக்காக வாதி எடுத்து சென்று விட்டார் என்று கூறி இருக்கிறேன் சற்று நேரத்திற்கு முன்னர் ரூ.1,08,000/- வட்டி கொடுத்ததாக சாட்சி சொல்லியிருக்கிறேன் எது உண்மை என்றால் இரண்டுமே உண்மை தான். பி.வா.சா.ஆ.3ல் கண்ட தொகைக்கு எவ்வளவு வட்டி கணக்கீடு செய்யப்பட்டது என்றால் மாதம் ரூ.4,500/- என்று கணக்கீடு செய்யப்பட்டது வண்டி எடுத்து சென்றதற்கு வட்டி சரியாகிவிட்டது என்று சொல்லிவிட்டார். எவ்வளவு வட்டி ரூபாய்க்கு வேன் மதிப்பு சரியாகிவிட்டது என்று சொன்னார் என்றால் அந்த கணக்கை சொல்லவில்லை. வாதி என்மீது உள்ள நம்பிக்கையின் பேரில் தான் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும் தாவா அடமானகடன் மீது பணம் கொடுத்தார் என்றாலும் பணம் வாங்கிக்கொண்டு தான் கிரைய ஒப்பந்தம் மற்றும் தாவா அடமான கடன் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.